**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.118/2021**

**Prosecution Witnesses :6**

| | | | |
|---|---|---|---|
| Name | :சின்னபாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : ராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(21.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடைய தான். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ. 3 ஆகவும்**, அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ. 4 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

கடந்த 04.03.2020ம் தேதி 16.40 மணிக்கு நானும் ஈச்சம்பட்டியை சேர்ந்த முத்தையாதேவர் மகன் கார்கோடன் எங்கள் சொந்த வேலையாக தும்மக்குண்டு வந்துவிட்டு கார்கோடன் என்னை இருசக்கர வாகனத்தில் ஏற்றி கொண்டு கட்டதேவன்பட்டிக்கு செல்வதற்காக வேப்பனூத்து பள்ளிக் கூடம் அருகே வந்து கொண்டிருநத் போது எங்களை சிந்துபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் நிறுத்தி சிந்துபட்டி காவல் நிலைய குற்ற

எண்.41/21 ச/பி. 379, 511 இதச வழக்கை பற்றி எங்களிடம் எடுத்து சொல்லி வழக்கின் எதிரியான வேப்பனூத்து கருப்பன் மகன் முத்துபாண்டி என்பவர் எங்கள் முன்னிலையில் தங்களிடம் எவ்வித அச்சுறுத்தலோ ஆசைவார்த்தையின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் அந்த வாக்குமூலத்தில் முத்துபாண்டி கடந்த 03.03.2021ம்தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் அயன்மேட்டுப்பட்டி புதூர் மலையடிவாரத்தில் உள்ள மலைராமன் கோவிலில் உள்ள உண்டியலை உடைக்க முயற்சிக்கு பயன்படுத்திய இரும்பு கம்பியை மலையடிவாரத்தில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக தங்களிடம் சொன்னார். அதன் பின்னர் எங்களையும் அவருடன் அழைத்து கொண்டு அயன்மேட்டுப்பட்டி புதுர் மலையடிவாரத்தில் உள்ள முட்புதரில் இருந்து S வடிவான இரும்பு கம்பி ஒன்றை 04.03.2021ம் தேதி சுமார் 17.45 மணிக்கு முத்துபாண்டி தங்களிடம் கொடுத்தார். அதை அத்தாட்சி எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கார்கோடனும் கையெழுத்துசெய்தோம் என போலிசார் விசாணையில் சொல்லிவிட்டு தற்போதுமாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.118/2021**
**Prosecution Witnesses :7**

| | | | |
|---|---|---|---|
| Name | :கார்கோடன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : **முத்தையாதேவர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(21.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது ஈச்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து அ.சா.ஆ. 5 ஆகவும்**, அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **மேற்படி கையெழுத்து அ.சா.ஆ. 6 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

கடந்த 04.03.2020ம் தேதி 16.40 மணிக்கு நானும் கட்டதேவன்பட்டியை சேர்ந்த ராமன் மகன் சின்னபாண்டியும் நானும் எங்கள் சொந்த வேலையாக தும்மக்குண்டு வந்துவிட்டு நான் இருசக்கர வாகனத்தில் சின்னபாண்டியை ஏற்றி கொண்டு கட்டதேவன்பட்டிக்கு செல்வதற்காக வேப்பனூத்து பள்ளிக் கூடம் அருகே வந்து கொண்டிருந்த போது எங்களை சிந்துபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் நிறுத்தி சிந்துபட்டி காவல் நிலைய குற்ற

எண்.41/21 ச/பி. 379, 511 இதச வழக்கை பற்றி எங்களிடம் எடுத்து சொல்லி வழக்கின் எதிரியான வேப்பனூத்து கருப்பன் மகன் முத்துபாண்டி என்பவர் எங்கள் முன்னிலையில் தங்களிடம் எவ்வித அச்சுறுத்தலோ ஆசைவார்த்தையின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் அந்த வாக்குமூலத்தில் முத்துபாண்டி கடந்த 03.03.2021ம்தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் அயன்மேட்டுப்பட்டி புதூர் மலையடிவாரத்தில் உள்ள மலைராமன் கோவிலில் உள்ள உண்டியலை உடைக்க முயற்சிக்கு பயன்படுத்திய இரும்பு கம்பியை மலையடிவாரத்தில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக தங்களிடம் சொன்னார். அதன் பின்னர் எங்களையும் அவருடன் அழைத்து கொண்டு அயன்மேட்டுப்பட்டி புதுர் மலையடிவாரத்தில் உள்ள முட்புதரில் இருந்து S வடிவான இரும்பு கம்பி ஒன்றை 04.03.2021ம் தேதி சுமார் 17.45 மணிக்கு முத்துபாண்டி தங்களிடம் கொடுத்தார். அதை அத்தாட்சி எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் சின்னபாண்டியும் கையெழுத்து செய்தோம் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை